

# TIST

July 2006

# CHEZHUMAI ©

## TIST India Expanding

TIST India is spreading its activity to villages like Samundi & Kavadu of Mel Kodungalur Center and Ilayanarvellur of Wallajah Center (New Center). TIST requests all the members to inform their friends and relatives of the above villages to participate with TIST.

During the month of June 2006, we had two visitors, 1) Dr.Vijay D.Anand, National Director of A Rocha India, Bangalore and 2) Rohit Jindal, Doctoral Student from Michigan State University, USA.



The International Small Group & Tree Planting Program

# செழுமை ©

## டிஐஎஸ்டி இந்தியாவின் விரிவாக்கம்

டிஐஎஸ்டி இந்தியா தனது பணியை, மேல் கொடுங்கலூர் மையத்தை சார்ந்த சாமுண்டி, காவாடு மற்றும் புதிய மையமான வாலாஜா மையம் போன்ற கிராமங்களுக்கும் விரிவுபடுத்தியுள்ளது. டிஐஎஸ்டி தனது உறுப்பினர்களிடம், தங்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களிடமும் டிஐஎஸ்டி பற்றி எடுத்து கூறி அவர்களையும் பங்கு கொள்ள செய்யுமாறு கேட்டுகொள்கிறது.

ஜீன் மாதம் 2006'ல் இரு பார்வையாளர்கள் வந்திருந்த–னர். 1) டாக்டர் விஜய் டி.ஆனந்த், தேசிய இயக்குனர், அரோசா இந்தியா பெங்களூர் 2) ரோஹித் ஜிந்தால், ஆராய்ச்சி மாணவா. மிச்சிகன் தேசிய பல்கலைக்கழகம், அமெரிக்கா.

**TIST India** : New No.52, Guru Ram Flats, Flat D, Venkat Ratnam Nagar, Adyar 600 020. Phone : 044 24411637, Mobile : 9840299822, Web: www.tist.org
**TIST USA** : Phone : 001 9188511917 Email : rameshn@tist.com

## A Rocha India, Bangalore

A Rocha India is based in Bangalore and started with a founding conference held at the Ecumenical Christian Centre, Bangalore, in February 2003. A Rocha India is a non-profit public charitable trust with objectives relating to the conservation of natural resources and biodiversity in the Indian subcontinent.

Dr.Vijay D.Anand, National Director of A Rocha India made a visit to TIST India Project areas. They were taken to Chittoor Village. They have collected datas from the groves of Chittoor Small Groups and got lot of information from TIST members for their study.

A Rocha will help TIST India to expand to more villages. Their main join will be environmental development and community development. We can get their expertise to choose trees and they would be giving good training for our members in various aspects towards the environmental and community development.




## அரோஷா இந்தியா, பெங்களூர்

பிப்பிரவரி 2003'ல் இக்யுமெனிக்கல் கிறிஸ்தவ மையம், பெங்களுரில் நடைபெற்ற தொடக்க மாநாட்டில் ஆரம்பிக்கப்பட்ட அரோஷா தற்பொழுது பெங்களுரை அடிப்படையாக கொண்டு செயல்படுகிறது. இது மக்களுக்காக நடத்தப்பட்டு வரும் தர்ம ஸ்தாபனம். இதன் நோக்கம் இந்திய துணைகண்டத்தின் இயற்கை வளங்களையும், உயிரின வகைகளையும் பாதுகாப்பதேயாகும்.

டாக்டர். விஜய். டி.ஆனந்த் தேசிய இயக்குனர் இந்தியாவின் பல பகுதிகளில் இயங்கிவரும் டிஐஎஸ்டியின் பகுதிகளை பார்வையிட்டார். சித்தூர் கிராமத்திற்கு அவர் அழைத்து செல்லப்பட்டார். அங்குள்ள சிறுகுழுக்களிடம், தங்களின் தோப்புகள் பற்றியும, டிஐஎஸ்டி சம்பந்தப்பட்ட பல விஷயங்களையும் சேகரித்து கொண்டார்.

அரோஷா இந்தியாவில் உள்ள இன்னும் பல கிராமங்கள் வளர்ச்சிக்கு உதவ டிஐஎஸ்டிக்கு உதவிகரம் நீட்டியுள்ளது. இவர்களின் முக்கிய பணி சுற்றுசூழல் வளர்ச்சி மற்றும் சமூக வளர்ச்சியாகும். நாம் மரங்களை தேர்வு செய்வதில் அவர்களின் ஆலோசனையை பெறலாம். அங்கத்தினர்க்கு சுற்றுசுழல் மற்றும் சமூக வளர்ச்சியை பற்றி அறிந்து கொள்வதற்கு சிறந்த பயிற்சி அளிக்கின்றனர்.



Dr.Vijay D.Anand, A Rocha India in Chittoor

டாக்டர். விஜய். டி.ஆனந்த், அரோஷா இந்தியா, சித்தூர் கிராமத்தில்

## Rohit Jindal, Doctoral Student from Michigan State University, USA

Rohit made visit to many of our project areas like Chittoor, Kandoor, Mel Kodungalur, Thonaiampattu, Ulundhai, Vazhur and Kavaniathur. He met many of our villagers and had detailed discussions with them. Before he visited us, he studied about our growth and tree status in our website and when he visited our project areas, he saw in reality whatever he read in our website. Rohit was very happy to see the TIST activities and he said it is absolutely a foolproof activity. TIST congratulates every member for their wonderful efforts in performing the ‘Best Practices’ of TIST India.

Rohit would be submitting a report to his university (Michigan State University, USA) about our project. We strongly believe that, his report will strongly recommend us to the carbon credit buyers. TIST is looking forward to get good buyers very soon.




Rohit Jindal having chat with members of Chittoor

ரோஹித் ஜிந்தால் சித்தூர் அங்கத்தினரோடு கலந்துறையாடல்

## ரோஹித் ஜிந்தால், மிசிகன் பல்கலைகழகத்தின் ஆராய்ச்சி மாணவர்

சித்தூர், கண்டுர், மேல் கொடுங்கலூர், துனையம்பட்டு, உளுன்டை, வழுர் மற்றும் கவனியத்துார் போன்ற இடங்களை ரோஹித் பார்வையிட்டார். கிராமித்தினரை சந்தித்து அவர்களுடன் கலந்துறையாடினார். இந்தியா வரும் முன் இவர், நம் வளர்ச்சி மற்றும் மரங்களின் நிலை இவற்றை பற்றி இணையதளத்தின் மூலம் தெரிந்து கொண்டதை இந்தியா வந்தவுடன் நேரில் கண்டு வியந்தார், டிஐஎஸ்டி சிறப்பாக செயல்படுவதாக பாராட்டினார். இதற்கு காரணமாக இருந்த, டிஐஎஸ்டியின் சிறப்பு பயிற்சிகளை மேற்கொண்டு வரும் ஒவ்வொரு சிறு குழு அங்கத்தினரையும் டிஐஎஸ்டி பாராட்டுகிறது.

ரோஹித் அவர்கள் நம் செயல்பாடுகள் மற்றும் திட்டங்களைப் பற்றி நடத்திய ஆய்வு அறிக்கையை மிசிகன் பல்கலைகழகத்தில் சமர்ப்பிப்பார். இவரின் ஆய்வு அறிக்கை மேலும் பல கார்பன் கிரிடிட் வாங்குபவர்களிடம் நம்மை அறிமுகப்படுத்த உதவியாக இருக்கும் என்று உறுதியாக நம்புகிறோம். ஆகவே பல நல்ல விற்பனையாளர்கள் கிடைப்பார்கள் என்று டிஐஎஸ்டி எதிர்ப்பார்க்கிறது.



## TIST Voucher payment during June

TIST has issued the vouchers to Mel Kodungalur Small Groups and the members have taken their vouchers. Chandiran and C p Organic Small Groups are getting their voucher for the first time, even though they have been with us fore more than two years. All these days they were not participating in TIST activities. Since January 2006 they have been following the 'Best Practices' well and assured to show multiple species in their groves once we release them their voucher payment. TIST India is happy give them their voucher.

Voucher Amount to Mel Kodungalur

| Sl.No | Small Groups | Voucher Amount |
|---|---|---|
| 1 | Rose Wood | 6,460.20 |
| 2 | Lotus | 130.24 |
| 3 | Salsa | 10,701.51 |
| 4 | SiddiVinayagar | 102.12 |
| 5 | Balaji | 9,895.28 |
| 6 | Roja | 1,042.66 |
| 7 | Kamatchi | 3,445.07 |
| 8 | Chandiran | 8,382.72 |
| 9 | C p Organic | 10,137.63 |
| | **TOTAL** | **50,297.43** |

Vandhavasi Small Groups will be getting their voucher payment during July 2007. Small Groups who do not have a bank account should immediately open their account at the Indian Bank, Mel Kodungalur Branch to facilitate TIST to issue the voucher.

Sign the GHG agreement and take the Voucher payment.

ஜிஎச்ஜி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உடனடியாக வவுச்சர் தொகையைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## ஜீன் மாதத்தில் டிஐஎஸ்டியின் வவுச்சர் பேமென்ட்

மேல் கொடுங்கலூரை சார்ந்த சிறு குழுக்கள் தங்கள் வவுச்சர் பேமென்ட்டை பெற்றுக்கொண்டார்கள். சந்திரன் மற்றும் சி.பி ஆர்கானிக் சிறு குழுக்கள் டிஐஎஸ்டியில் சேர்ந்து இரண்டு வருடங்களுக்கு மேல் ஆன பிறகும் இப்பொழுதுதான் முதல் முறையாக பேமென்ட் பெறுகிறார்கள். இதுவரை இவர்கள் டிஐஎஸ்டியின் செயல்களில் பங்கெடுக்கவில்லை. ஆனால் ஜனவரி 2006 முதல் டிஐஎஸ்டியின் சிறப்பு பயிற்சிகளை நன்றாக கடைப்பிடித்து வருவதோடு மட்டுமின்றி இவர்களின் வவுச்சர்பேமென்ட் வெளியிடும் சமயம் தங்கள் தோப்பில் பல இனவகை மரங்களும் இருக்கும் என்றும் உறுதி கூறியுள்ளனர். இவர்களுக்கு வவுச்சர் பேமென்ட் அளிப்பதில் மகிழ்ச்சியே என்கிறது டிஐஎஸ்டி, இந்தியா.

மேல் கொடுங்கலூர் – வவுச்சர் பேமென்ட்

| எண் | சிறு குழுக்கள் | வவுச்சர் தொகை |
|---|---|---|
| 1 | ரோஸ் உட் | 6,460.20 |
| 2 | லோட்டஸ் | 130.24 |
| 3 | சால்சா | 10,701.51 |
| 4 | சித்திவிநாயகர் | 102.12 |
| 5 | பாலாஜி | 9,895.28 |
| 6 | ரோஜா | 1,042.66 |
| 7 | காமாட்சி | 3,445.07 |
| 8 | சந்திரன் | 8,382.72 |
| 9 | சி.பி. ஆர்கானிக் | 10,137.63 |
| | மொத்தம் | **50,297.43** |

வந்தவாசி சிறு குழுக்கள் ஜீலை 2007ல் தங்கள் வவுச்சர் பேமென்ட்டை பெறுவார்கள். வங்கி கணக்கு இல்லாத சிறுகுழுக்கள் உடனடியாக இந்தியன் வங்கி – மேல் கொடுங்கலூர் கிளையில் சேமிப்பு கணக்கு தொடங்கினால் டிஐஎஸ்டி வவுச்சர் வெளியிட வசதியாக இருக்கும்.

## Arulparamjothi Small Group of Vellaputur

The members of Arulparamjothy Small Group are doing a great job with TIST by performing the 'best practices'. This small group has all long standing trees, like Mango, Lemon and Coconut. Presently, there are more than 3,200 trees in their grove and they have more than 300 seedlings of Lemon and Coconut. In between each mango trees, they have given 15 feet gap. In fact, there should be more than 25 feet gap between each mango trees to get good yield. This Small Group had made a good start with multiple species of trees and they stand as a good example for the upcoming small groups of Vellaputur.



Arulparamjothi Small Group of Vellaputur




Arulparamjothi Small Group of Vellaputur

## அருள்பரம்ஜோதி சிறு குழு – வேலபுதூர்

இந்த சிறு குழுவை சார்ந்த அங்கத்தினர்கள் டிஐஎஸ்டியின் சிறப்பு பயிற்சிகளை மேற்கொண்டு நன்றாக செயல்ப்பட்டு வருகிறார்கள். இச்சிறு குழுவில் மா, எலுமிச்சை, தென்னை போன்ற பல நாள் வாழக்கூடிய மரங்கள் உள்ளன. தற்பொழுது இத்தோப்பில் 3,200 க்கும் மேற்ப்பட்ட மரங்களும், 300 க்கும் மேற்ப்பட்ட எலுமிச்சை மற்றும் தென்னை நாற்றுகளும் உள்ளன. ஒவ்வொரு மாமரத்திற்க்கும் இடையே 15 அடி இடைவெளி அமைத்துள்ளனர். ஆனால் நல்ல பலனை அளிக்க வேண்டுமெனில் 25 அடி இடைவெளி வேண்டும். இச்சிறு குழு பலஇனவகை மரங்களை கொண்டு நன்றாக தொடங்கி இப்பொழுது வளர்ந்து வரும் வேலபுதூரில் உள்ள சிறுக்குழுக்களுக்கு முன் மாதிரியாக விளங்குகிறது.




அருள்பரம்ஜோதி சிறு குழு – வேலபுதூர்



அருள்பரம்ஜோதி சிறு குழு – வேலபுதூர்

TIST Extends a Special Thanks to the following Small Groups for their wonderful support:

1. Chamundi Small Group of Chittoor
2. Chandiran Small Group of Chittoor
3. Sakthi Small Group of Sokandi
4. SindhuKavi Small Group of Chittoor
5. Balaji Small Group of Mel Kodungalur

The members of the above small groups are very helpful during Node meeting and spreading the TIST activities to their friends and relatives by their word of mouth.

## Job Opportunity

There are few vacancies in TIST India like, Quantifier & Coordinator. Interested members may meet your TIST Officials. You can also introduce your relatives and friends for these jobs, but they should join with TIST as Small Groups before taking up the responsibilities of a Quantifier or Coordinator.

கீழ்காணும் இச்சிறுக்குழுக்களுக்கு டிஜஎஸ்டி தனது நன்றியை தெரிவித்து பாராட்டுகிறது.

1. சாமுன்டி சிறு குழு – சித்தூர்
2. சந்திரன் சிறு குழு – சித்தூர்
3. சக்தி சிறு குழு – சொக்கன்டி
4. சிந்துகவி சிறு குழு – சித்தூர்
5. பாலாஜி சிறு குழு – மேல் கொடுங்கலூர்

மேற்குறிப்பிட்ட இச்சிறுகுழுக்களை சார்ந்த அங்கத்தினர்கள் நோடு கூட்டங்களிலும், டிஜஎஸ்டியின் பயிற்சிகளை விரிவாக்கப்–படுத்துவதிலும், தங்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் டிஜஎஸ்டியை பற்றி எடுததுறைப்பதிலும் சிறப்பாக செயல்பட்டுள்ளனர்.

## வேலை வாய்ப்பு

டிஜஎஸ்டி இந்தியாவில் உள்ள காலியாக இருக்கும் பணி இடங்கள் – ஆய்வாளர் / கணக்கெடுப்பாளர் மற்றும் ஒருங்கினைப்பாளர். விருப்பம் உள்ள அங்கத்தினர் உங்களின் டிஜஎஸ்டி அதிகாரிகளை சந்தியுங்கள். உங்களின் உறவினர்களையும், நண்பர்களையும் இந்த பணி இடங்களுக்காக அறிமுகப்படுத்தலாம். ஆனால் அவர்கள் சிறு குழுக்களில் சேர்ந்த பின்பே கணக்கெடுப்பாள் / ஒருங்கினைப்பாளராக பொறுப்பு ஏற்றுக்கொள்ள இயலும்.

| நோட் கூட்ட அட்டவணை | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நோடு | உட்பட்ட கிராமங்கள் | நோட் மையம் | கிழமை | காலம் | நேரம் | |
| | | | | | முதல் | வரை |
| வாசி மற்றும் மேல் கொடுங்கலூர் | சிங்கப்பள்ளி உளுந்தை மேல் கொடுங்கலூர் காட்டுக்கொல்லி | வன்தவாசி, மேல் கொடுங்கலூர் குன்னவாக்கம் | முதல் சனி<br>01.07.2006<br>05.08.2006 | மாலை<br>மாலை | 3.00<br>5.30 | 5.00<br>7.30 |
| கட்டியாம்பந்தல் | கட்டியாம்பந்தல் வெள்ளப்புத்தூர் | கட்டியாம்பந்தல் | இரண்டாவது ஞாயிறு<br>09.07.2006<br>13.08.2006 | காலை | 9.00 | 12.00 |
| சித்தூர் | சீராநல்லூர், சித்தூர், நந்திமேடு, மொளச்சூர்,. ஆட்டுப்புத்தூர் சிங்காடிவாக்கம் மருதம், ஜம்போதை | மொளச்சூர் மருதம், ஜம்போதை | மூன்றாவது ஞாயிறு<br>16.07.2006<br>20.08.2006 | காலை | 8.30 | 10.30 |
| காந்தூர் | சோகண்டி காந்தூர் | மொளச்சூர் | மூன்றாவது ஞாயிறு<br>16.07.2006<br>20.08.2006 | காலை | 11.00 | 01.00 |
| ஆண்டிச்சிறு வல்லூர் | வேடல், சிறுவல்லூர் ஆண்டிச்செருவல்லூர் கொட்டவாக்கம் மேல்ப்படவூர், சிறுவல்லூர், மேட்முக்காலனி | வேடல் | நான்காவது சனி<br>22.07.2006<br>26.08.2006 | மாலை | 3.00 | 5.00 |



TIST

**TIST India** : New No.52, Guru Ram Flats, Flat D, Venkat Ratnam Nagar, Adyar 600 020. Phone : 044 24411637, Mobile : 9840299822, Web: www.tist.org

**TIST USA** : Mr.N.Ramesh, Phone : 001 9188511917
Email : rameshn@tist.com